செ.கு.எண்:- 101 நாள்:- 13-03-12

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 13.3.2012

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், பெட்டவாய்த்தலை கிராமத்தில் உள்ள ரத்னா மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் எம். ஜோதிமணி, ஆர். வினோத்குமார் மற்றும் கே. செந்தமிழ்செல்வன் ஆகியோர் இன்று (13.3.2012), தேர்வு முடிந்து இரு சக்கர வாகனத்தில் வீடு திரும்பிச் செல்லும் வழியில் லாரி மோதி விபத்து ஏற்பட்டதில், எம். ஜோதிமணி, ஆர். வினோத்குமார் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த விபத்தில் கே. செந்தமிழ்செல்வன் என்ற மாணவர் படுகாயமுற்றான் என்ற செய்தியை அறிந்து நான் வருத்தமடைந்தேன்.

இவ்விபத்தில் அகால மரணமடைந்த எம். ஜோதிமணி, ஆர். வினோத்குமார் ஆகிய மாணவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். படுகாயமடைந்து, திருச்சி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வரும் கே. செந்தமிழ்செல்வனுக்கு சிறப்பான முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளதோடு, மாணவன் செந்தமிழ்செல்வன் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற என் விருப்பத்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்படி விபத்தில் மரணமடைந்த எம். ஜோதிமணி, ஆர். வினோத்குமார் ஆகியோரது குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்கவும், படுகாயமுற்ற செந்தமிழ்செல்வனுக்கு 25,000 ரூபாய் வழங்கவும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குந...
செய்தி, மக்கள் தொடர்புத் துறை...
சென்னை-9